சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 30.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | கலைவாசன் |
| தந்தை பெயர் | : | கல்யாணசுந்தரம் |
| கிராமம் | : | நாடாக்குடி |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | வேலை எதுவும் இல்லை |
| வயது | : | 40 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4, 6 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி வேறு ஒரு வழக்கில் மதுரை மத்திய சிறையில் உள்ள காரணத்தினால் அவரை ஆஜர் செய்ய P.T Warrant பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் போதிய காவலர்கள் இல்லாத காரணத்தினால் வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர் படுத்துவதாக வேண்டுகோள் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் இன்று மேற்படி 3 ம் எதிரி வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு கடந்த 6 மாத காலமாக எனக்கு கண்ணில் பார்வையில்லை. இது தொடர்பாக தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறேன். என்னால் ஒரு அடி தூரத்தில் உள்ளபொருட்களை தவிர வேறு எந்த பொருட்களையும் பார்க்க இயலாது. அருகில் நிற்பவர்கள் கூட யார் என்று எனக்கு தெரியாது. நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவன் ஆவேன். எங்கள் ஊரை சேர்ந்த தங்கவேல் மகன் சாமிநாதன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் 2011ம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் எப்படி இறந்தார் என்றால் அவரை யாரோ கொன்று விட்டதாக சொன்னார்கள். 2011 ஆம் ஆண்டு எனக்கு பார்வை நன்றாக இருந்ததா என்றால் நன்றாக தான் இருந்தது. அவர் எப்படி இறந்தார் என்பதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. அவர் இறந்த போது நான் சென்னையில் T நகரில் ஒரு நபரிடம் கார் ஓட்டுனராக பணிபுரிந்தேன். எனக்கு போன் மூலம் தகவல் கிடைத்ததன் அடிப்படையில் நான் வந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக என்ன விவரம் தெரியும் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 10.07.2011 ம் தேதி மாலை 7.00 அளவில் எங்கள் ஊரை சேர்ந்த சாமிநாதன் என்பவரை சில நபரகள் கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டு நான் மறுநாள் 11.07.2011 ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத கிடங்கில் வைத்து போலீசார் இறந்து போன சாமிநாதன் என்பவரது பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யும்போது உடனிருந்து என்றும் சொன்னால் சரியல்ல. நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை

விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது மேற்படி விவரத்ததை சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.30 17:05:35 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.